பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 10 2026 WEDNESDAY 6 30 PM

<u>வணக்கம் - மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாட்கள் உற்பத்தியுடன் இணைந்த போனஸ் வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2) வேளாண் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டம் வகுக்கப்படவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) விவசாயிகள் மற்றும் ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4) வடகிழக்கு பருவமழை அடுத்த 24 மணிநேரத்தில் தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

5) 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vishvajit Ramachandra More இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாட்கள் உற்பத்தியுடன் இணைந்த போனஸ் வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இதற்காக 2 ஆயிரத்து 9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன்மூலம், 11 லட்சத்து 40 ஆயிரம் ரயில்வே ஊழியர்கள் பயனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ரயில்வே துறையில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>>><<<<<<

வேளாண் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டம் வகுக்கப்படவுள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற தேசிய வேளாண் மாநாட்டில் நிறைவுரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்துடன் இணைந்து இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேளாண் ஆராய்ச்சியின் பலன்கள் விவசாயிகளை முழுமையாக சென்றடைய வேண்டியது அவசியம் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>><<<<<<

விவசாயிகள் மற்றும் ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் த.வெ.க. அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார் கூறியுள்ளார்.

இன்று தருமபுரியில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

நடப்பு நிதியாண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு 735 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசின் திட்டங்கள் கடைக்கோடி பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும் குறித்த காலத்திற்குள் முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதை இலக்காக கொண்டு த.வெ.க. அரசு செயல்படுவதாக திரு. ராஜ்குமார் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் நீண்டகால கடன் வழங்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் சிங்கப்பெண்கள் கடன் மற்றும் வீட்டுவசதி கடன்களுக்கான சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதர முன்னுரிமை கடன் திட்டங்களுக்கான சிறப்பு முகாம்கள் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகுதியுடைய உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக 30 லட்சம் ரூபாய் வரை நீண்டகால கடன் வழங்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் மின்சாரத்தை குறைந்த விலையில் கொள்முதல் செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்பற்றாக்குறையை எதிர்கொள்ள ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 35 ரூபாய் கொடுத்து 4 ஆயிரத்து 500 மெகாவாட் மின்சாரத்தை வெளிச்சந்தையில் வாங்குவதாக தமிழக அரசு அறிவித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக உரிய ஆய்வு செய்யப்பட்டதா? என்பது குறித்து விளக்கம் அளிக்கப்படாத நிலையில், கொள்முதல் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்படுவதாகவும் திரு. வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

காவிரி டெல்டா மாவட்டங்களை த.வெ.க. அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், த.வெ.க. அரசின் நிர்வாக திறமையின்மை காரணமாக, சம்பா மற்றும் தாளடி சாகுபடியை விவசாயிகள் இழந்துள்ளதாக கூறியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் திரு. விஜய், விவசாயிகள் பெற்ற கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் திரு. டி.டி.வி. தினகரன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் முதலமைச்சர் திரு. விஜய் செயல்பட்டு வருவதாக த.மா.கா. தலைவர் திரு. ஜி.கே. வாசன் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிருஷ்ணா - கோதாவரி இணைப்புத் திட்டம் குறித்து முதலமைச்சர் பேசியிருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று, தமிழகத்திற்கு கூடுதல் கிருஷ்ணா நீரை வழங்க தயார் என்று ஆந்திர முதலமைச்சர் கூறியிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்றும் திரு. ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வடகிழக்கு பருவமழை அடுத்த 24 மணிநேரத்தில் தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - வி ஆர் துரை 39 Sec.)*

இதற்கிடையே, பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய் மூன்று முறை ஆலோசனை நடத்தியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - அருண்ராஜ் 33 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

உலக தர நிர்ணய தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தர நிர்ணயம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக, ஆகாஷவாணியின் மாநில செய்திப் பிரிவிற்கு விருது வழங்கப்பட்டது.

இந்த விருதினை இணை இயக்குநர் திரு. ஆர். சிதம்பரநாதன் பெற்றுக் கொண்டார்.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டம், அணைக்குடம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 52 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. மிருணாளினி, பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>>><<<<<<

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி கடற்கரை பகுதியில் பனை விதை நடும் பணியினை கூடுதல் ஆட்சியர் திரு. கோகுல் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அஞ்சலகங்களிலும் தேசிய அஞ்சலக வார விழாவினை முன்னிட்டு, சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

>>>>>><<<<<<

கோவையில் பிரதமரின் இல்லந்தோறும் சூரியமின்சக்தி திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருநெல்வேலியில் மாவட்ட கலை விருதுகளை ஆட்சியர் திரு. ஆனந்த் மோகன், 15 கலைஞர்களுக்கு இன்று வழங்கினார்.

>>>>>><<<<<<

திருவாரூர் புலிவலம் பகுதியில் ஆதார் சேவை மையத்தை வருவாய் கோட்டாட்டயர் சத்யா தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் சிறு குறு மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை இணையவழியில் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. விஷ்ணு மஹாஜன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vishvajit Ramachandra More இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் Las Vegas-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 7-4 என்ற புள்ளிக்கணக்கில் ரஷ்யாவின் Gigiev Malik-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

உலக Skate விளையாட்டுப் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

பராகுவேயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் 3 ஆயிரம் மீட்டர் தொடர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>><<<<<<